சிறப்பிதழ்
Special Issue

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S.Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr.M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

20 மாசி 2052
04th March 2021

ISSN : 2321 - 984X

# நவீனத் தமிழாய்வு

(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021
தமிழ்த்துறை,
ந.க.ம. கல்லூரி,
பொள்ளாச்சி, தமிழ்நாடு, இந்தியா

## தமிழ் இலக்கியத்தில் ஆளுமை

சிறப்பிதழ் ஆசிரியர்
**Special Issue Editor**

**முனைவர் ம. சித்ரகலா**
உதவிப்பேராசிரியர்

*Published by*

**RAJA PUBLICATIONS**
10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,
Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.
Mobile : +91-9600535241
website : rajapublications.com

13 பகுதி-1
Part -1

Scanned with OKEN Scanner

[illegible]

# செம்மொழித் தமிழ்

(பன்னாட்டுப் பல்துறைத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்)

[illegible]

| | | |
|---|---|---|
| ஜனவரி | - | மார்ச் |
| ஏப்ரல் | - | ஜூன் |
| ஜூலை | - | செப்டம்பர் |
| அக்டோபர் | - | டிசம்பர் |

Journal of

# CLASSICAL THAMIZH

*(A Quarterly International Multi latarai Thamizh Journal)*

| | | |
|---|---|---|
| January | - | March |
| April | - | June |
| July | - | September |
| October | - | December |

ISSN:2321-0737

# முத்தமிழ் காப்பியத்தில் கிளைக்கதைகளின் ஆளுமை

அ.மகபுபூ
முனைவர் பட்ட ஆய்வாளர்,
தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி.

**ஆய்வுச் சுருக்கம்**

முத்தமிழ் காப்பியத்தில் கிளைக்கதைகளின் ஆளுமை என்ற தலைப்பிலான கட்டுரையில் முன்னுரை, கிளைக்கதைகள், அகத்தியர் சாபம், மாலதி கதை, அழகர் மலை, பார்ப்பினியும் கீரிப்பிள்ளையும், பத்தினிப் பெண்டிர் எழுவர், ஆகியவை ஆராயப்பட்டுள்ளதோடு கட்டுரையின் தொகுப்புரையாக முடிவுரை அமைக்கப்பட்டுள்ளதே இக்கட்டுரையின் ஆய்வுச் சுருக்கம் ஆகும்.

**முன்னுரை**

முதல்காப்பியம், முத்தமிழ்க்காப்பியம், தேசியக்காப்பியம் எனப் பல சிறப்புகளைக் கொண்டது சிலப்பதிகாரக் காப்பியம். தமிழகத்திற்கே உரிய தலைச்சிறந்தக் காப்பியமாகும். இது சேர, சோழ, பாண்டியர் என முடிமன்னர் மூவர்க்கும் உரியது. மேலும்,

> **“அரைசியல் பிழைத்தோருக்கு அறம்கூற்று ஆவதூஉம்,**
> **உரைசால் பத்தினிக்கு உயர்ந்தோர் ஏத்தலும்**
> **ஊழ்வினை உருத்துவந்து ஊட்டும்”**

என்ற மிகப்பெரிய உண்மையைக்கூறும் குடிமக்கள் காப்பியமாகும். இவற்றில் முக்கியக் கதைமாந்தர்களான பத்தினி தெய்வம் கண்ணகி, சிறந்த வணிகன் கோவலன், ஆடலரசி மாதவி ஆகியவர்களைக் கொண்டு கதைத் தொடர்ந்தாலும் இதில் துணைக் கதாப்பாத்திரங்களும் பல கிளைகதைகளும் உள்ளன.

முற்பிறவிகதை, முசுகுந்தன் கதை, நாரதர் சாபம், தேவந்தியின் கதை, பார்ப்பினியும் கீரிப்பிள்ளையும், பொய்சாட்சி புகன்றவன், தேவகுமாரன் கதை, பத்தினிப் பெண்டிர் எழுவர் என கிளைக்கதைகள் உள்ளன. அவற்றைச் சுருக்கமாக விளக்குவதாக இக்கட்டுரை அமைகிறது.

**கிளைக்கதைகள்**

எளிமையான கதைகளின் மூலம் நல்ல அறங்களை எடுத்துரைக்க முடியும் அந்த வகையில் நம் முன்னோர்கள் கதையில் கூறும் வழக்கத்தைப் பெரியவர்களும் ஆர்வத்துடன் கேட்கும் வழக்கத்தினைச் சிறியவர்களும் இயல்பாகவே பெற்றிருந்தனர்.

ஆனால் இன்றைய நவீனத்துவத்தில் இத்தகைய அரிய கருத்துக்கள் பொதிந்த கதைகளைக் கேட்கும் வழக்கம் குறைந்து விட்டது. இன்று தொலைக்காட்சியிலும் கைப்பேசியிலும் கணினியிலும் காலங்கள் அழிந்து போகின்றன. சிலப்பதிகாரம் சிலம்புக் கதை வழியாக நமக்கு அறக்கருத்துக்களை எடுத்தியம்புகிறதென்றாலும், அதிலுள்ள கிளைக்கதைகள் ஒரு நிகழ்வைக் கூற மற்றொரு நிகழ்வை நினைவுபடுத்துவது போன்ற பல கிளைக்கதைகள் காப்பியத்தின் இடையிடையே கூறப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

**முசுகுந்தன் கதை**

மக்களின் குறைகளைத் தீர்ப்பதற்காக ஏற்படுத்தப்பட்டமன்றங்கள் அவை உருவான கதையை முசுகுந்தன் கதை கூறுகிறது. அசுரர்கள் தேவர்களைத் துன்புறுத்துகின்றனர். இந்திரன் சோழ

மன்னாகிய முசுகுந்தனிடம் வந்து முறையிட்டான். முசுகுந்தன், இந்திரன் தலைநகராகிய அமராபதிக்கு அசுரர்களால் அழிவு வராமல் பாதுகாத்தான். எதிர்த்த அசுரர்களைத் தோற்கடித்தான். தோற்ற அசுரர்கள் ஒன்று கூடினர். முசுகுந்தன் கண்ணும் மனமும் இருளும்படி ஒரு கணையை எய்தனர். அச்சமயத்திலே ஒரு பூதந்தோன்றி முசுகுந்தனுக்கு ஒரு மந்திரத்தை உபதேசித்தது. இந்த மந்திரத்தால் அசுரர்களின் மாயத்தை ஒழித்தான். அவர்களை வென்றான்.

இவ்வாறு வெற்றி பெற்ற முசுகுந்தனிடம் அசுரர்களை நீ எவ்வாறு வென்றாய்? என்று இந்திரன் கேட்டான். முசுகுந்தன் பூதம் தனக்குப் புரிந்த உதவியை உரைத்தான். அப்பூதத்திற்கு முசுகுந்தனிடம் சென்று காவிரிப் பூம்பட்டினத்தைக் காக்கும்படி இந்திரன் கட்டளையிட்டான். அப்பூதம் காவிரிப் பூம்பட்டித்தை அடைந்தது. நாளங்காடியிலே அமர்ந்தது. காவிரிப் பூம்பட்டினத்தைக் காத்து வருகின்றது.

முசுகுந்தன் செய்த உதவிக்குக் கைம்மாறாக இந்திரன் ஐவகை மன்றங்களான

- வெள்ளிடை மன்றம்,
- இலஞ்சி மன்றம்,
- நெடுங்கல் மன்றம்,
- பூத சதுக்க மன்றம்,
- பாவை மன்றம்

என்பவைகளைக் காக்கும் படி கூறினான். இவை ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு இயல்புகள் உள்ளன என்பதை,

"இருபெரும் வேந்தர் முனையிடம் போல
இருபாற் பகுதியின் இடைநிலம் ஆகிய
.......... ........... ........... சிலம்பும்
தேவர் கோமான் ஏவலிற் போந்த"

(இந்திர.60:110)

மேற்கண்ட பாடல் வரிகளின் மூலம் அறிய முடிகிறது.

## அகத்தியர் சாபம்

மாதவியின் முற்பிறப்பைக் ... இந்திரன் சபையிலே உருப்பசி ... ஆடுகின்றாள். நாரதர் வீணை வாசி... அப்பொழுது இந்திரன் மகன் சயந்தனை உ... கண்டு காதல் கொள்கிறாள். இத... உருப்பசியின் ஆடல் பாடலிலே தவறு நே... நாரதர் வீணையும் மங்கலத்தை இழந்தது ... கண்டு கோபம் கொண்ட அகத்தியர் மூவரு... சாபம் கொடுத்தார் உருப்பசி மாதவியாக... சயந்தன் மூங்கிலாகவும் நாரதர் வீணையாக... மண்ணுலகில் பிறந்தனர். அம்மாதவி... சிலப்பதிகார காப்பியத்தில் இடம்பெறும் ம... இதனை,

"நாடகம் உருப்பசி நல்காள் ஆகி
மங்கலம் இழப்ப வீணை, மண்மிசை...
.......... .......... ........... .........
அமரர் தலைவனை வணங்குதும் யா...
எனச்

(மேலது,கடல்.6:...)

என்ற சிலப்பதிகார வரிகள் இயம்புகின்றன.

## மாலதி கதை

கண்ணகியின் உயிர்த்தோழி தேவந்... அவளின் வாழ்க்கையின் முக்கிய நிகழ்வை... கூறுவதாக இக்கதை அமைகிறது. அதாவ... மாலதி என்பவள் ஒரு பார்ப்பினியாவாள். அவ... தன் மாற்றாய் குழந்தைக்குப் பால் ஊட்டினா... பால் விக்கி அக்குழந்தை இறந்தது.

மாற்றாளும் கணவனும் தன்மீது ப... சுமத்துவார்களே என அஞ்சி மாலதி ப... கோயிலுகளுக்கும் குழந்தையுடன் சென்... புலம்பினாள். இறுதியாக பண்டத்துச் சாத்த... கோயிலை அடைந்து குழந்தையைப் பிழைக்க... வைக்க வேண்டி வரம் கேட்டாள். நள்ளிரவில்... சுடுகாட்டுக் கோட்டத்திலேயுள்ள பிணம் தின்னு... இடாகினிப் பேய் ஒன்று பெண் உருவில் வந்த...

மாலதியிடமிருந்த குழந்தைப் பிணத்தை வாங்கி விழுங்கிவிட்டது.

இது போன்ற செய்தி ரகுநாதனின் 'ஆனைத்தீ' என்ற நூலில் "*பிள்ளை வரம் கேட்டலுக்கு பிணந்தின்னியைத் தந்தீரோ*" என்ற வரிகளைச் சு.சண்முகசுந்தரம் தனது நூலில் பதிவு செய்துள்ளார்.

இடாகினிப் பேயின் இச்செயலைக் கண்ட மாலதி சாத்தனை நோக்கி வாய்விட்டு அழுதாள். அவளது துயர் கண்ட சாத்தன் இரக்கமுற்று அவள் முன் தோன்றி "***நீ செல்லும் வழியில் உள்ள சோலையிலே குழந்தை உயிருடன் உள்ளது***" என்று கூறி, குழந்தை உருவில் தானே உருக்கொண்டு கிடந்தான். மாலதி அக்குழந்தையைக் ஈன்றாளிடம் அளித்தாள்.

அக்குழந்தை வளர்ந்து கல்வி கற்று, தாய் தந்தையரைக் கவனித்து அவர்கள் இறந்தபின் இறுதிக்கடன்களையெல்லாம் இயற்றினான். பிறகு சாத்தன் தேவந்தி என்பவளை மணந்து எட்டு ஆண்டுகள் இல்லற வாழ்கையில் இருந்து அதன் பின் தனது உண்மை உருவத்தைக் காட்டினான். தான் தீர்த்தயாத்திரைக்குச் செல்ல இருப்பதாகக் கூறித் தன் கோயிலை அடைந்தான்.. தேவந்தி அச்சாத்தன் கோவிலை அடைந்து அங்கு வழிபாடு செய்து கொண்டிருந்தாள் என்பதனை,

> "மாலதி மாற்றாள் மகவுக்குப் பால் அளிக்கப்
> பால்விக்கிப் பாலகன் -தான் சோர மாலதியும்
> ............ ............ ............ ............
> மூவா இளநலம் காட்டி, எம் கோட்டத்து
> நீவா என உரைத்து நீங்குதலும்"
>
> (சிலம்பு,கனாத்திறம்,5:35)

புகார்க்காண்டம் கனாத்திறம் உரைத்த காதையில் உள்ள பாடல் வரிகளில் இச்செய்தியை அறியலாம்.

அழகர் மலை

அழகர்மலைக்குத் திருமால் இருங்குன்றம் என்பது பழம்பெயர். இது பற்றிச் சிலப்பதிகாரம் சொல்லும் கதை வியப்பிற்குரியது. திருமாலிருங்குன்றத்தில் ஒரு பிலம் - சுரங்கம் இருக்கின்றது. அதனுள் புண்ணிய சரவண, பவகாரணி, இட்டசித்தி என மூன்று பொய்கைகள் உள்ளன.

- புண்ணிய சரவணத்திலே நீராடினால் இந்திரவியாகரணத்தைக் கற்கலாம்.
- பவகாரணியில் நீராடினால் பழம்பிறப்பை அறியலாம்.
- இட்டசித்தியிலே பழகினால் நினைத்தவை எல்லாம் வாய்க்கப் பெறலாம்.
- பிலத்தினுள் செல்ல விரும்பினால் திருமாலை எண்ணிக் கொண்டு குன்றத்தை மும்முறை வலம் வர வேண்டும்.

அவ்வாறு வலம் வந்தால் சிலம்பாற்றின் கரையிலே ஒரு இயக்கி தோன்றுவாள். அவள் பெயர் வரோத்தமை என்பது. அவள் "***இம்மையில் இன்பம் யாது? மறுமையில் இன்பம் யாது?***" என்ற இவ்வினாக்களுக்கு விடை கூறினால் "***பிலத்தின் கதவைத் திறப்பேன்***" என்பாள் விடையளித்தோருக்குக் கதவைத் திறந்து உள்ளே போகும் வழி இதுவென்று காட்டுவாள்.

அவ்வழியே சென்றால், பல வாயில்களையும் கடந்து இரட்டைக் கதவு போட்ட வாயில் ஒன்றைக் காணலாம். அதையும் தாண்டிச் சென்றால் பதுமை போன்ற அழகான பெண் ஒருத்தி தோன்றுவாள். அவள், "***அழிவற்ற இன்பம் யாது?***" என்று கேட்பாள். அதற்கு விடை அளித்தால், "***இன்மையின்பம், மறுமையின்பம், அழிவில் இன்பம்***" இம்மூன்றில் ஒன்றைப் பெறலாம் என்பாள். விடையளிக்காது விட்டாலும் துன்புறுத்தாது உம்மை வந்த வழியே அனுப்பி வைப்பாள். விடையளிப்போரை மேலே சொல்லிய



Scanned with OKEN Scanner

பொய்கைகளின் கரையிலே கொண்டுபோய் விடுவாள். "நீங்கள் விரும்பியதைப் பெறுங்கள்!" என்று கூறிவிட்டுப் சென்று விடுவாள் என்று மாங்காட்டு மறையோன் கோவலனிடம் இக்கதையைக் கூறினான்.

"திருமால் குன்றத்துச் செல்குவீர் ஆயின்
பெருமால் கெடுக்கும் பிலம் உண்டு: ஆங்கு
விண்ணோர் ஏத்தும் வியத்தகு மரபின்
புண்ணிய சரவணம், பவகா ரணியோடு
இட்டசித்தி எனும் பெயர் போகி,

......................................

மாண்புடை மரபின் மதுரைக்கு ஏகுமின்
காண்தகு பிலத்தின் காட்சி ஈது"

(சிலம்பு,காடுகாண்,8:95:140)

இக்கதை வைணவ மததர்மத்தின் உண்மையை விளக்கக் கூறப்பட்டது. இதைக்கேட்ட கவுந்தியடிகள் அம்மறையோனைப் பார்த்துக் கூறுவதன் வாயிலாகச் சமண மத உண்மையான அருகதருமத்தைப் பின்பற்றுவதன் மூலம் எல்லா நன்மைகளையும் பெறலாம் என்பதாகும்.

"இறந்த பிறப்பின் எய்திய வெல்லார்
பிறந்த பிறப்பிற் காணாயோ நீ? "

மேலது,10:150:155)

மாங்காட்டு மறையோன் கூறுவதாகவும் அதற்கு கவுந்தியடிகள் பதிலளிப்பதாகவும் அமைகின்றன.

## பார்ப்பினியும் கீரிப்பிள்ளையும்

பார்ப்பினி ஒருத்தி கீரிப்பிள்ளை ஒன்றை வளர்த்து வந்தாள். அதைத் தன் குழந்தைக்குக் காவலாக வைத்துவிட்டு வெளியில் சென்றாள். அக்குழந்தையின் அருகில் வந்த பாம்பு ஒன்றைக் கண்டு கீரிப்பிள்ளைக் கடித்துக் கொன்று விட்டது. பார்ப்பினி வீட்டிற்கு வரும் வேளையில் கீரிப்பிள்ளையோ குருதி வடியும் வாயுடன் எதிர்க் கொண்டது. அதைக்கண்ட பார்ப்பினி கீரிப்பிள்ளை தன் குழந்தையைக் கடித்துக் கொன்றுவிட்டதாகக் கருதி தன் அருகில் இருந்த மணகுடைவையால் அதை அடித்துக் கொன்று விட்டாள். பின்... உண்மை அறியாது செய்ததை... வருந்தினாள்.

இதை அறிந்த கொழுநன்(கணவன்) கங்கையாட... நோக்கிச் சென்றான். மனைவியும்... சென்றாள். "உயிர்க்கொலை செய்த உன்... இனி இல்லறம் நடத்த இயலாது" என்று... வடமொழி வாசகம் எழுதிய ஏடு ஒன்றை... கையில் கொடுத்து "இவ்வேட்டை... பொருளை அறிவார் கையிலே கொடு..." என்று சொல்லிவிட்டு அவன் போய்விட்டான்.

அவள் அந்த ஏட்டுடன் வருந்தி... இடங்களிலும் சுற்றினாள். கோவலன் அ... அழைத்து அவளது வருத்தத்தைக் கேட்டு அ... பெற்று அவள் செய்த கொலைப்பா... நீங்குவதற்கான தான தருமங்களைச் செய்து... அவளுடன் அவளது கணவனையும் சே... வைத்ததான்.

மணிமேகலா தெய்வம் கோவலனின்... தெய்வமான கதை பொய்ச்சாட்சி புகன்றவன் க... தேவகுமாரன் கதை, பார்ப்பினி... கீரிப்பிள்ளையும் போன்ற இக்கதை... அடைக்கலக்காதையில் உள்ளன. கோவல... பெருமையைக் கூறவே இவையா... கூறப்பட்டிருப்பதை அறிய முடிகின்றது.

## பத்தினிப் பெண்டிர் எழுவர்

காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு வணி... இருந்தான். அவனுக்கு ஒரே மகள். அவ... மதுரையிலுள்ள தன் மருமகனுக்கு மணம் செ... கொடுக்க முடிவு செய்திருந்தான். அவ்வாறு ம... முடிக்கும் முன்பே அவனும் அவனது மனைவி... இறந்தனர். ஊரார் மதுரையிலுள்ள அவ... மருமகனுக்குச் செய்தி அனுப்பினர். அவ... காவிரிப்பூம்பட்டினத்திற்கு வந்தான். தன் மா... மகளை அழைத்துக் கொண்டு மதுரைக்குச் செ... திருமணம் செய்து கொள்ள விரும்பி போ...

வழியில் திருப்புறம்பியத்தில் இரவு தங்கியவனை பாம்பு கடித்து இறந்து விட்டான். செய்வதறியாது புலம்பியவளை அங்கு வந்த திருஞானசம்பந்தர் ஆறுதல் கூறி மாண்ட வணிகனை உயிர்ப்பித்தார். அப்பொழுதே அவனது மாமன் மகளை மணந்து கொள்ளும் படி உரைத்தார். அவன் சுற்றத்தார்களின் சாட்சியங்கள் இல்லையே என வருந்த இங்குள்ள வன்னிமரம், கிணறு, இலிங்கம் இவைகளைச் சாட்சிகளாகக் கொண்டு மணம் செய்து பின் மதுரை சென்று வாழ்ந்தான்.

அவ்வணிகனின் முதல் மனைவிக்கும், மாமன் மகளுக்கும் சண்டை ஏற்பட, முதல் மனைவி, என் கணவனை முறைப்படி மணந்து கொள்ளாதவள் இன்னாள்,குலம், கோத்திரம் தெரியாதவள் என்று கடிந்து பேசினாள். இதைக் கேட்ட இளையாள் உள்ளம் துடித்து, *“என் மணத்திற்கு வன்னியும் கிணறும், இலிங்கமும் சாட்சி உண்டு”* என்றாள். மூத்தாள் நகைத்தாள். இளையவள் மனம் நொந்து வேண்ட திருப்புறம்பியத்தில் இருந்த வன்னியும் கிணறும் இலிங்கமும் மதுரைக் கோயிலில் வந்து தோன்றி சாட்சி கூறியது. அதைக் கண்டு மூத்தாள் வாயடைத்து அடங்கினாள்.

இவ்வாறாக ஏழு பத்தினிப் பெண்களின் கதைகளான மணல்பதுமை, ஆட்டனத்தி, கல்லுருவில் நின்றவள், தன் குழந்தையை கிணற்றில் இட்டு மாற்றான் குழந்தையை மீட்டவள், குரங்கு முகமாக மாறியவள், தாய் கொடுத்த வாக்கைக் காப்பாற்றியவள் போன்ற கதைகள் வஞ்சினமாலையிலே கூறப்பட்டுள்ளது. இக்கதைகள் பத்தினிப் பெண்டிரது பெருமையை பறைசாற்றுகின்றது.

இவற்றுள் *“வன்னியும் கிணறும் இலிங்கமும் சாட்சியாக வந்த கதை திருவிளையாடற் புராணத்துள் காணப்படுகின்றது”* என்கிறார் சாமி சிதம்பரனார். இது மட்டுமல்லாது பொற்கைப் பாண்டியன் கதை, வார்த்திகன் கதை, பசுவுக்கு நீதி வழங்கியோன் கதை, சிபிச்சக்கிரவர்த்தியின் கதை, தொடித்தோள் செம்பியன், பெருஞ்சோற்று உதியன் சேரலாதன் முதலியோர் கதைகளும் கூறப்படுகின்றன. இவற்றை மூவேந்தர் பெருமை என்ற பகுதியிலே காணமுடிகின்றது.

## முடிவுரை

இவ்வாறாகச் சிலப்பதிகாரத்தில் சிலம்பின் காரணத்தால் ஏற்பட்ட கோவலன் கண்ணகி கதை என்றாலும் அதில் பல கிளைக்கதைகளும் பொதிந்தே உள்ளன. அவை ஒவ்வொன்றும் வெவ்வேறு அறக்கருத்துக்களை எடுத்தியம்புவதை அறிய முடிகிறது. இக்கதைகள் எல்லாம் கருத்தை விளக்கும் நோக்கம் உடையவை. இவற்றினுள் சிறுகதையின் பாங்கும் நோக்கமும்விளங்குகின்றது.

## தொகுப்புரை

- ✓ சிறு கதைகள் எழுதுவது புதுவழக்கம் அன்று. பழைய வழக்கம்தான். பண்டைய நூல்களைக் கற்றோர் இதை அறிந்தவரே.
- ✓ முசுகுந்தன் கதையானது நல்லோர்க்குத் துணையாக நிற்போர் –நல்லோர்க்கு உதவுவோர் – நன்மை பெறுவர் என்ற உண்மையை இக்கதை உணர்த்துகின்றது.
- ✓ நாரதர் கதையானது கடமை தவறுவோர் தீமை அடைவர் என்ற கருத்தை வலியுறுத்துகின்றது.
- ✓ தேவந்தியின் கதையானது இறந்தவர் பிழைப்பதில்லை. தெய்வத்தை நம்பினோர் பாதுகாக்கப்படுவர் என்ற கருத்தை முன்வைக்கின்றது.
- ✓ அழகர்மலையானது அருக மத மாண்பை விளக்கவே காடுகாண்காதையில் இக்கதை அமைக்கப்பட்டுள்ளது.
- ✓ பார்ப்பினியும் கீரிப்பிள்ளையும் அவரவர்செய்த வினையின் பயனை அவரவர்கள் தான்அனுபவித்துத் தீர வேண்டும் என்ற கருத்தை விளக்குகிறது.



Scanned with OKEN Scanner

✓ பத்தினிப்பெண்டிர் எழுவர் வஞ்சினமாலையில் கூறப்பட்டுள்ள இந்த ஏழு கதைகளும் பத்தினிப் பெண்டிர் பெருமையை நல்குகின்றது.

அகராதி

பிலம் - சுரங்கம், பாதாளம்

வியாகரணம் - இலக்கணம்

மணகுடவை - மண் பானை

கொழுநன் - கணவன்

குருதி - இரத்தம்

அடிக்குறிப்பு

1. சிலப்பதிகாரத் தமிழகம், சாமி சிதம்பரனார், ப.117

2. நாட்டுப்புற இலக்கியத்தின் செல்வாக்கு, சு.சண்முகசுந்தரம், ப.90

சுருக்கக் குறியீடு

இந்திர - இந்திர விழாஊர் எடுத்த காதை

கடல் - கடலாடு காதை

கனாத்திறம் - கனாத்திறம் உரைத்த காதை

காடுகாண் - காடுகாண் காதை

சிலம்பு - சிலப்பதிகாரம்

ப - பக்கம்

மேலது - மேற்கண்ட பாடல் வரிகள்

துணைநூற் பட்டியல்

1. சிலப்பதிகாரம் -புலியூர்க் கேசிகன், சாரதாப் பதிப்பகம்,சென்னை.
2. சிலப்பதிகாரத் தமிழகம் - சாமி.சிதம்பரனர், அறிவுப்பதிப்பகம், சென்னை.
3. தமிழ்-தமிழ்-ஆங்கிலம்-ஆங்கிலம் -அடோன் பப்ளிஷிங் குருப்,திருவனந்தபுரம்.



Scanned with OKEN Scanner

# குறிஞ்சித் திணை வாழ்வியலில் வேட்டைத்தொழில்

சி. அமுதா
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழ்த்துறை, என்.ஜி.எம்.கல்லூரி, பொள்ளாச்சி

ஆய்வுச் சுருக்கம்

குறிஞ்சித் திணை வாழ்வியலில் வேட்டைத்தொழில் என்ற தலைப்பிலான ஆய்வுக்கட்டுரையில் முன்னுரை, குறிஞ்சித் திணை வாழ்வியல்,குறிஞ்சித் திணைசார் தொழில், வேட்டையாடுதல், வேட்டைக் கருவிகள், வேட்டை ஒப்பனை, வேட்டைத்தொழிலைப் புனிதமாகக் கருதுதல், வேட்டை உத்திகள, வேட்டை நாய்களைப் பயன்படுத்துதல், பிளவு வைத்து வேட்டையாடல், பொறி அமைத்தல், வேட்டையாடப்பட்ட விலங்குகள யானை வேட்டை, பன்றி வேட்டை, முள்ளம் பன்றி வேட்டை, மான் வேட்டை, முயல் வேட்டை, உடும்பு வேட்டை போன்ற துணைத்தலைப்புகளில் ஆராயப்பட்டு கட்டுரையின் முடிபை தொகுப்புரையாக வழங்கப்பட்டுள்ளதே இக்கட்டுரையின் ஆய்வுச்சுருக்கம் ஆகும்.

## முன்னுரை:

ஒரு நாடு சிறப்புற்றிருக்க மலைவளம் அவசியம். பல்லுயிர்களும் அடங்கிய சூழலியல் மண்டலமான மலையில்தான் மனிதவரலாறு தொடங்குகிறது. காட்டுமிராண்டியாக நாடோடி வாழ்க்கை வாழ்க்கை வாழ்ந்த பழையகற்கால மனிதன் அவனது தேவைகளை அறிவின் துணைகொண்டு நிறைவு செய்து நாகரிக வாழ்வு வாழக் கற்றுக் கொண்டது மலையில் தான்.இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட தமிழகத்தில் இம்மலை நிலங்கள் '*குறிஞ்சி*' என்றழைக்கப்பட்டன. இக்குறிஞ்சி நிலப்பகுதிகளில் வாழ்ந்த மக்கள் மலைகளின் இயற்கைப் பின்னணியில் விலங்குகளை வேட்டையாடியும், தேன், கிழங்கு போன்ற உணவுப்பொருட்களை சேகரித்தும், தினை விளைவித்தும் தமது வாழ்க்கைத் தேவையை நிறைவு செய்தனர்.குறிஞ்சி நில மக்கள் மேற்கொண்ட வேட்டைத்தொழில் முறைகள் பற்றி எட்டுத்தொகை அகப்பாடல்கள் வழி ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## குறிஞ்சித் திணை வாழ்வியல்:

குறிஞ்சி நிலமானது மேடு பள்ளமான மலைப்பகுதி ஆகும். *"சேயோன் மேய மைவரை உலகமும்" (தொல்.பொருள்.அகத். 5)*என்று தொல்காப்பியர் குறிஞ்சி நிலத்திற்கு இலக்கணம் வகுக்கிறார். சிறு செடிகள் முதல் உயர்ந்த செம்மரம் வரை உள்ள தாவரங்களும், மிகச்சிறிய விலங்கினம் முதல் உருவத்தில் பெரிய யானைகள் வரை வாழ்வது மலைப் பகுதிகளில்தான்.இம்மலைகளின் பசுமைக்கு முக்கிய காரணமாக விளங்குபவை அருவி, சுனை, ஊற்று, காட்டாறு முதலிய நீராதாரங்கள் ஆகும்.

அருவி நீர் மலைகளின் இடையே பெருக்கெடுத்து வழிந்து ஓடுகின்ற காட்சியினை,

> "எதிர் எதிர் ஓங்கிய மால்வரை அடுக்கத்து
> அதிர் இசை அருவி" (கலி. 44: 1-2)

என்ற கலித்தொகைப் பாடல் வரிகளில் காட்சிப்படுத்தியிருப்பதன் மூலம் குறிஞ்சி நிலத்தின் நீர்வளம் பற்றி அறிய முடிகிறது.

குறிஞ்சி நிலப்பகுதியில் வாழும் மக்களில் ஆண்கள் வேட்டுவர். கானவர், குறவர் என்றும் பெண்கள் வேட்டுவிச்சியர், கொடிச்சியர், குறத்தியர் என அழைக்கப்படுகின்றனர்.



Scanned with OKEN Scanner

இக்குறவர்கள் வாழ்ந்த வீடுகளை, 'நடுகாற் குரம்பை' என்பர். இவை எளிமையாக அமைக்கப்பட்ட குடிசை வீடுகள் ஆகும். இக்குடிசைகள் குறுகிய கால்களை உடையதால் 'குறியிறைக் குரம்பை' என்றும் காட்டுப் புல்லால் வேயப்பட்டதால் 'புல்வேய் குரம்பை' என்றும் வழங்கப்பட்டன. இச்செய்தியினை,

"குன்றக் குறவன் புல்வேய் குரம்பை
மன்று ஆடு இளமழை மறைக்கும் நாடன்"
(ஐங். 252: 1-2)

"புனை வினை நல் இல் புள்ளும்"
(அகம். 141: 3)

என்ற பாடல் வரிகளிலும் அறிய முடிகிறது.

குறவர்கள் வசிக்கும் இவ்வூர்கள் 'குறவர் பாக்கம்' (குறுந். 319,339,) சிறுகுடி ( நற்.82, திருமுருகு. 196) என்று அழைக்கப்பட்டன.

குறிஞ்சித் திணைசார் தொழில்:

குறிஞ்சி மக்கள் மலைப்பகுதிகளில் இயற்கையாக விளையும் தேன், கிழங்குகளைச் சேகரித்தும், இறைச்சிக்காக வேட்டையாடியும் தம் உணவுத் தேவையை நிறைவு செய்தனர். பழைய கற்கால வாழ்க்கையின் தொடர்ச்சியாக குறிஞ்சி நிலத்தில்தான் மக்கள் நாடோடி வாழ்விலிருந்து நிலையான வாழ்வு பெறத் துவங்கினர் என்பதை அறியமுடிகிறது.

எட்டுத் தொகை அகப்பாடல்களில் உள்ள குறிஞ்சித்திணைப் பாடல்களில் குறவர்கள் மேற்கொண்ட தொழில்கள் பற்றிப் பல செய்திகள் காணப்படுகின்றன. அவற்றின் அடிப்படையில் குறிஞ்சித் திணைத் தொழில்களை,

1. வேட்டையாடுதல்
2. தேனெடுத்தல், கிழங்கெடுத்தல்
3. வேளாண்மை
4. பிறதொழில்கள்


என வகைப்படுத்தலாம். குறிஞ்சி...
வேட்டைத்தொழிலே முதன்மைத்...
மேற்கொள்ளப்பட்டது.

வேட்டையாடுதல்:

வேட்டைக்காடுகள் சூழப்பட்ட ... நிலப்பகுதியில் வாழ்ந்த குறவரினம் ... வேண்டிய இறைச்சியைப் பெறவும், விலங்... பிற வேலைகளைச் செய்... பழக்குவதற்காகவும், வேளாண் நில... பாதுகாப்பிற்காகவும் வேட்டையாடத் தொட...

மனிதன் தொடக்கத்தில் விலங்குகள் ... காட்டில் வாழ்ந்த போது தம்மைக் கொல்ல... விலங்குகளைத் தாக்கி வீழ்த்தி வாழ முற்... நிலையில் வேட்டைத் தொழில் தோன்றியுள்...

"தற்காப்பிற்கும், உணவிற்கும் மனி... கற்ற முதல் தொழில் வேட்டையாடுதல்" (பண்டை... தமிழர், ப.22) என்று சொக்கப்பா வேட்டை... தொழிலின் பழமை குறித்துக் குறிப்பிடுகிறார்.



இன்று குறவர் நலனுக்காக ஏற்படுத்தப்பட்ட பல சங்கங்களில் பொதுவாகப் பச்சை நிற வண்ணத்துணியில் வெள்ளைநிற வில் அம்பு பொறிக்கப்பட்ட கொடி சின்னமாக வைத்திருப்பதைக் காணமுடிகிறது. இதைப்பற்றி, "சங்கத்தின் கொடி பச்சைநிறத்தில் அதன் நடுவில் வெள்ளை வண்ணத்தில் வில், அம்பு பொறிக்கப்பட்டதாக இருந்தது. வில், அம்பு என்பது ஐவகைத் திணைகளில் ஒன்றான குறிஞ்சி நிலத்தில் செய்து வந்த வேட்டையின் குறியீடாகும். இதன் மூலம் மலை மற்றும் காடு சூழ்ந்த குறிஞ்சி மக்களின் பாரம்பரிய வாழ்க்கையை நினைவூட்டுவனவாகும்" (குறவர் பழங்குடி, ப.229)



Other Cou...

என்று மணி.கோ. பன்னீர் செல்வம் குறிப்பிடுவதிலிருந்து வேட்டைத் தொழிலின் பழமையும், பாரம்பரியமும் நன்கு புலனாகிறது.

குறவர் பல வகையான வேட்டைக்கருவிகளைப் பயன்படுத்தி வேட்டைத்தொழிலை மேற்கொண்டனர்.

**வேட்டைக் கருவிகள்:**

மலைகளில் விளையும் மூங்கிலைக் கொண்டு உருவாக்கப்பட்ட வில், அம்பு ஆகியவற்றை வேட்டைக் கருவியாகப் பயன்படுத்தி கானவர் வேட்டையாடினர்.

**"வாங்கு அமை நோன் சிலை"** (அகம். 182: 2)

**"கூர் வாய்ப் பகழி"** (அகம். 248: 7)

**"பச்சூன் பெய்த பகழி"** (நற். 75: 7)

**"வன்கைக் கானவன் வெஞ்சிலை"** (நற். 285: 3)

என்ற பாடல் வரிகளில் கானவர் பயன்படுத்திய வில்லும், அம்பும் பற்றிய குறிப்புகள் காணப்படுகின்றன.

குறவர்கள் வேட்டைக்கு வலை (நா.திவ்.பிர.264) சில்லிக்கோல் (வளைதடி), பறவை பிடிக்கும் கண்ணி, முக்கூடு (கு.குறம். 80,86) போன்ற கருவிகள் பயன்படுத்தியமையை இலக்கியங்களில் காணமுடிகிறது.

**வேட்டை ஒப்பனை:**

குறவர் வேட்டைக்குப் போகும் முன் வேங்கைப் பூ சூடிப் புறப்படுவர். இச்செய்தியினை,

**"பூங்கண் வேங்கைப் பொன் இணர் மிலைந்து"** (அகம். 182:1)

என்ற அகநானூற்று வரிகளில் வேங்கை மரத்தின் பொன் போன்ற மலர்களைச் சூடிக் குறவன் வேட்டைக்குக் கிளம்புவதைக் காணமுடிகிறது.

சங்க காலக் குறவர்கள் வேட்டையின் போது காலில் செருப்பணியும் வழக்கம் கொண்டிருந்தனர். இச்செருப்புகள் தோலால் செய்யப்பட்டவையாகும்.

**"தொடு தோற் கானவன்"** (அகம். 368:1)

என்ற வரிகளில் காலில் தோல் செருப்பணிந்திருக்கும் கானவரைக் காணமுடிகிறது.

இவ்வாறு வேட்டைக்குச் செல்லும் கானவரின் தோற்றப் பொலிவினைக் குறிஞ்சிப்பாட்டில்,

**"இயல் அணிப் பொலிந்த ஈகை வான் கழல்**
**துயல் வருந்தோறும் திருந்து அடிக் கலாவ**
**முளையாழ் படுக்கும் துன் அருந்துப் பின்**
**பகைபுறம் கண்ட பல்வேல் இளைஞரின்**
**உரவுச் சினம் செருக்கி துன்னு தொறும் வெகுளும்**
**முனைவாள் எயிற்ற வள் உகிர் ஞமலி**
**திளையாக் கண்ண வளைகுபு நெரிதர"**
(கு.பா. 123-132)

என்ற வரிகளில் குறிப்பிடப்படுகிறது. இதில் வேட்டைக்குச் செல்வோர் கைகளில் வில்லினை ஏந்தி அம்புகளைப் பிடித்துக் கொண்டும், வீரக்கழல் அணிந்த காலினை மெதுவாக எடுத்து வைத்துச் செல்லும் நிலையினையும் விளக்குகிறது.

வேட்டையாடும்போது ஏற்படும் களைப்பிற்குக் குறவர் இனிய பலாப்பழத்தின் தேனை இளையவர்களுடன் குடித்து வேட்டைக்குச் சென்றனர் என்ற செய்தியினை அகநானூற்றில் (அகம். 182)காணமுடிகிறது.

**வேட்டைத்தொழிலைப் புனிதமாகக் கருதுதல்:**

குறவர்களின் மனைவியர் கணவரது வேட்டைத்தொழிலைப் புனிதமாகக் கருதினர். வேட்டைக்குத் தயாராகும் கானவரை, அவர்தம் மனைவியர் தெய்வம் என்று வணங்கி வாழ்தலால் அவர்களின் அம்புகள் குறி தவறாது இலக்கினை அடைகின்றன என்ற நம்பிக்கை குறவர்களிடையே இருந்தது. இச்செய்தியினை,

"வாங்கு அமை மென் தோட் குறவர் மடமகளிர்
தாம் பிழையார், கேள்வர்த் தொழுது எழலால் தம் ஐயரும்,
தாம் பிழையர் தாம் தொடுத்த கோல்"

(கலி. 39:16-18)

என்ற கலித்தொகைப் பாடல் வரிகளில் குறமகளிரின் பதிபக்தியால் குறவர் விடுக்கும் அம்புகள் குறி தவறாது செல்வதையும், வேட்டைத்தொழிலைத் புனிதமாகக் கருதும் குறவர் மனநிலையையும் உணரமுடிகிறது.

மேற்கூறிய கருத்துக்கள் மூலம் குறவர் வேட்டைத்தொழிலை ஒரு முறைப்படுத்திய அமைப்பு முறையில் மேற்கொண்டனர் என்பதை அறிய முடிகிறது.

**வேட்டை உத்திகள்:**

குறவர்கள் தம் வேட்டைத்தொழிலுக்குத் துணையாக வேட்டைநாய்களைப் பயன்படுத்தினர். பிளவுகள் அமைத்தல், பொறிகள் அமைத்தல் போன்ற நுட்பமான முறைகளையும் பயன்படுத்தி வேட்டைத் தொழிலை மேற்கொண்டனர்.

**வேட்டை நாய்களைப் பயன்படுத்துதல்:**

குறவர்கள் வேட்டைக்குத் துணையாக நாய் வளர்த்தனர். வேட்டை நாய்கள் வலிமையானவை. வேட்டையாடும் போது விலங்குகளைத் தப்பவிடாமல் பிடிக்க வல்லது.

"ஓட்டு இயல் பிழையா வயநாய் பிற்பட
வேட்பம் போகிய குறவன் காட்ட"

(அகம். 182: 5-6)

என்ற அகப்பாடல் வரிகளில் விலங்குகளைத் தப்பாது பிடிக்கும் வேட்டைநாய்கள் பின்வரக் குறவர் வேட்டைக்குச் செல்வதைக் காணமுடிகிறது.

வேட்டையாடப்படும் விலங்குகள் சென்ற வழித்தடத்தையும்,அவை பதுங்கியிருக்கும் ...ழிகளையும் கண்டுபிடிக்கும் மோப்பத்திறன் ...ய்க்கு உண்டு. அதனால் குறவர்கள் நாய்களை வைத்திருந்தனர். மான், முயல் ... விலங்குகள் வேட்டைநாய்கள் ... வேட்டையாடப்படுவதை,

"கல்லென் கானத்து கடமா ஆட்டி
எல்லும் எல்லின்று ஞமலியும் இனைத்...

(குறுந். 179: ...

என்ற குறுந்தொகை வரிகள் மூலம் அ... முடிகிறது.

வேட்டையின் போது நாய்களை குறிப்பால் அழைக்க ஊதுகொம்பு ஊதி பழக்கப்படுத்தி இருந்தனர்.

"கல் கெழு சிறுகுடி எய்திய பின்றை
ஊதல் வேண்டுமால் சிறிதே – வேட்டொ...
வேய் பயில் அழுவத்துப் பிரிந்த நின்
நாய் பயிர் குறிநிலை கொண்ட கோடே"

(அகம். 318: 12-15)

என்ற அகநானூற்றுப் பாடலில் வேட்டையாடுங்காலத்தில் மூங்கில் காட்டில் பிரிந்த வேட்டுவர்கள் ஊது கொம்பு ஊதிக் குறிப்பால் நாய்களை அழைப்பதைக் காணமுடிகிறது.

"கோடு துவையா கோள் வாய் நாயொடு
காடு தேர்ந்து அசைஇய மான் வேட்டை"

(நற். 276: 1-2)

என்ற நற்றிணைப் பாடலிலும் ஊதுகொம்பு ஒலிக்க, வேட்டை நாய்கள் பின்தொடர, காட்டை நன்கு ஆராய்ந்து குறவர் மான் வேட்டையாடும் செய்தியினைக் காணமுடிகிறது.

"குறவர் வேட்டையாட நாய் போன்ற மிருகங்களை ஒரு காலத்தில் வளர்ந்து வந்தனர். தற்போது இவ்வழக்கம் இல்லை பூனை, அணில் போன்ற உயிரினங்களின் குட்டிகளைப் பிடித்து வந்து வேட்டை நாய்க்கு முன்னே விட்டு, அதைப் பிடிக்கப் பழக்குவர். சிறு அணில், பூனைக் குட்டிகளை ஓடிப் பிடித்துக் கடித்து அதனோடு பழகும். கடித்துப் பழகும்போது அவ்வுயிரினங்களின் இரத்தம் நாயின் வாயில்



Scanned with OKEN Scanner

படுவதன் வாயிலாக ரத்த ருசி ஏற்பட்டு, அணில், பூனை போன்ற உயிரினங்களைப் பிடிக்க ஆவலைத் தூண்டும் பெரும்பாலும் ஒவ்வொரு குறவரும் இரண்டு நாய்களை வளர்ந்து வந்ததாக அறியமுடிகிறது" (குறவர் பழங்குடி, ப.67) என்று குறவர் வேட்டை நாயை வேட்டைக்குப் பழக்குவதை மணி கோ.பன்னீர் செல்வம் குறிப்பிடுகிறார்.

### பிளவு வைத்து வேட்டையாடல்:

குறவர் விலங்குகளைப் பிடிக்க பிளவுகள் வைத்தனர். விலங்குகள் வரும் வழியில் பிளவு செய்யப்பட்ட மரத்துண்டை வைப்பர். இரைதேடி வரும் விலங்குகள் தெரியாமல் அப்பிளவில் மாட்டிக்கொள்ளும்.

பிளவு வைத்துக் குறவர் காட்டுப்பன்றியினைப் பிடிக்கின்ற காட்சியினை,

"சிறுகட் பன்றிப் பெருஞ்சின ஒறுத்தல்
சேறு ஆடு இரும் புறம் நீரோடு சிவண
வெள் வசிப் படீஇயர், மொய்த்த வள்பு அழீஇ,
கோள் நாய் கொண்ட கொள்ளைக்
குானவர் பெயர்க்கும் சிறுகுடியானே"
(நற். 82: 7-11)

என்ற நற்றிணைப் பாடலில் காணமுடிகிறது. இப்பாடலில் ஆண்பன்றி பிளவில் மாட்டிக்கொள்வதைக் காணமுடிகி

### பொறி அமைத்தல்:

குறவர் விலங்குகளைப் பொறிகள் வைத்துப் பிடித்தனர்.தினைப் புனத்தில் மேய வரும் விலங்குகள் இப்பொறிகளில் சிக்கிக் கொள்ளும்.

"தினை யுண் கேழல் இரியப் புனவன்
சிறு பொறி மாட்டிய பெருங்கல்
ஒண்கேழ் வயப்புலி படுஉம் நாடன்"
(நற். 119: 1-3)

என்ற நற்றிணைப் பாடலில் தினைப்புனத்து வந்து மேயும் பன்றியைப் பிடிக்க அப்புனத்தினுடைய தலைவன், சிறிய இயந்திரமாக வைத்த பெரிய கற்பலகையின் கீழ் ஒளி பொருந்திய நிறமும் வலிமையும் உடைய புலி புகுந்து மாட்டிக் கொள்வதைக் காண்பதன் மூலம் பன்றி வேட்டைக்குப் பொறிகள் பயன்படுத்தப்பட்டன என்பதை அறிய முடிகிறது.

மேலும்,

"எய்ம் முள் அன்ன பருஉ மயிர் எருத்தின்
செய்ம்ம மேவல் சிறுகட் பன்றி
ஓங்குமலை வியன் புனம் படீஇயர் வீங்குபொறி
நூழை நுழையும் பொழுதில், தாழாது
பாங்கர்ப் பக்கத்துப் பல்லி பட்டென
மெல்ல மெல்லப் பிறக்கே பெயர்ந்து"
(நற். 98: 1-6)

என்ற நற்றிணைப் பாடலில் கானவர் அமைத்த பொறியில் சிக்காமல் முள்ளம்பன்றி நகர்ந்து செல்வதையும் காணமுடிகிறது.

இதன் மூலம் குறவர்கள் அன்றைய காலகட்டத்தில், வேட்டைத் தொழிலுக்கு உதவும் வகையில் கருவிகள் கண்டு பிடித்து பயன்படுத்திய செய்தியினை அறியமுடிகிறது.

### வேட்டையாடப்பட்ட விலங்குகள்:

குறவர்கள் பல வேட்டை உத்திகளைக் கையாண்டு யானை, மான், முயல், பன்றி ,உடும்பு போன்ற விலங்குகளை வேட்டையாடினர்.குறவர் வேட்டையாடப்பட்ட விலங்குகளிடமிருந்து பெறப்பட்ட இறைச்சி,தோல்,தந்தம் போன்ற பொருள்களைத் தம் தேவைக்காகவும்,பண்டமாற்று முறையில் பிற பொருள்களைப் பெறவும் பயன்படுத்திக்கொண்டனர்.

### வேட்டையாடப்பட்ட விலங்குகள யானை வேட்டை:

யானைகளைக் குறிஞ்சிக் கானவ தந்தங்களுக்காகவும், இறைச்சிக்காகவும் மன்னருக்கு பரிசளிக்கவும் வேட்டையாடினர்.

சங்க காலத்தில் யானைகளின் தந்தங்கள் மதிப்பிற்குரிய பொருளாகக் கருதப்பட்டது. எனவே தந்தங்களைப் பெறுவதற்காக யானைகளைக் கானவர் இரக்கமின்றி வேட்டையாடிய செய்திகள் அகப்பாடல்களில் காணப்படுகின்றன.

“இரும்பு வடித்தன்ன கருங்கைக் கானவன்
விரிமலர் மராஅம் பொருந்தி, கோல் தெரிந்து” “வரி நுதல் யானை அரு நிறத்து அழுத்தி
இகல் அடு முன்பின் வெண்கோடு கொண்டு தன்
புல் வேய் குரம்பை புலர ஊன்றி”
(அகம். 172: 6-10)

என்ற அகநானூற்றுப் பாடலில் வேட்டுவன் ஆண் யானையின் மார்பில் அம்பெய்திக் கொன்று, அதன் தந்தத்தைக் கொண்டு வந்து தன் குடிசையின் வாயிலில் ஊன்றி வைப்பதைக் காணமுடிகிறது.

காடுகளில் யானைகள் வழக்கமாகச் செல்லும் பாதைகளில் ஆழமான பெரிய குழிகளைத் தோண்டி, மூங்கில் படலிட்டுக் குழியை மறைத்து மேலே இலை தழைகளோடு மண்ணினைப் பரப்பி வைத்து அவ்வழியே வரும் யானையினைக் குழியில் விழச்செய்து பிடிப்பர். இவ்விதம் யானையினை வீழ்த்த வெட்டப்படும் குழிக்கு *‘பயம்பு’* என்று பெயர்.

“கயந்தலை மடப்பிடி பயம்பில் பட்டென
களிறு விளிப்படுத்த கம்பலை வெரீஇ”
(அகம். 165: 1-2)

என்ற அகப்பாடலில் யானை பிடிப்பதற்காகக் குறவர் *‘பயம்பு’* வெட்டி வைத்ததையும் அக்குழியில் யானையின் கன்று வீழ்வதையும் காணமுடிகிறது. இதன் மூலம் ‘பயம்புகள்’ குறவர்களின் வேட்டை உத்திகளுள் ஒன்றாக விளங்கியமையை அறிய முடிகிறது.இவ்விதம் ‘பயம்பில்’ விழுந்த யானைகளைப் பழக்கிய யானைகள் மூலம் மேலேற்றிப் பின்பு பயிற்சியளித்து படைகளில் சேர்ப்பர்.

யானையின் தந்தங்களைக் கொ… பண்டமாற்றாக உணவுப்பொருள்கள் பெ… இதனை,

“காந்தள் அம் சிலம்பில் சி… பசித்தெனக்
கடுங்கண் வேழத்துக் கோடு நொ… உண்ணும்”
(குறுந். 100: 3-4)

என்ற குறுந்தொகைப் பாடல் வரி… சிறுகுடி மக்கள் யானையின் தந்தங்களை வி… பசியாறுவதன் மூலம் காணமுடிகிறது.

மேலும், தந்தங்களைக் குறவர் அந்… நாட்டு மன்னர்களுக்குப் பரிசாகவும் கொடுத்… சேரன் செங்குட்டுவன் வேனிற்காலத்… ஓய்வெடுக்க மலைப்பகுதியில் தங்கியிருந்தபே… அப்பகுதியில் வாழ்ந்த குறவர்கள் மலை… பொருள்களையும், யானைத் தந்தங்களை… காணிக்கையாய்க் கொண்டு கொடுத்தனர் எ… செய்தியினை சிலப்பதிகாரத்தில் (25:37) கா… முடிகிறது.

**பன்றி வேட்டை:**

குறவர்க… இறைச்சிக்காகக் காட்டுப் பன்றிகளை… வேட்டையாடினர். தினைப்புனம் மேயு… பன்றிகளைக் கானவன் அம்பெய்… வேட்டையாடினர்.

“கொடுவிற் கானவன் கோட்டு… தொலைச்சிப்
பச்சூன் பெய்த பகழி போல”
(நற். 75: 6-7)

என்ற நற்றிணைப் பாடல் வரிகளில் கானவன் காட்டுப்பன்றியை அம்பெய்திக் கொல்வதைக் காணமுடிகிறது.

இவ்வாறு கானவன் மலைப்பகுதியில் வில்லால் அடித்துக் கொன்று எடுத்து வரும் பன்றியின் இறைச்சியை அவனது மனைவி தன் உறவினர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கிறாள். இச்செய்தியை,

"கல் அதர் அரும் புழை அல்கி, கானவன்
வில்லின் தந்த வெண் கோட்டு ஒற்றை
புனை இருங் கதுப்பின் மனையோள்
கெண்டி,
குடி முறை பகுக்கும்" (நற். 336: 3-6)

என்ற நற்றிணைப் பாடல் வரிகளில் காணமுடிகிறது.

மேலும் சங்ககாலத்தில் தொடர்ச்சியாகவே பன்றிக்கறி உணவு குறவர் வாழ்வில் நீங்காமல் நிலைத்து நிற்கிறது. "பன்றியைக் குட்டியிலேயே கறி சமைக்கும் வழக்கம் குறவர்களிடம் காணப்படுகிறது. குறவரின் திருமணம், காதுகுத்து விழாக்களில் பன்றிக்கறி விருந்தும் சாராயமும் கட்டாயம் உண்டு. பன்றியிலிருந்து 'நெய்' எடுக்கப்படுகிறது. குறவர்களிடமிருந்து இந்நெய்யைப் பிற இன மக்கள் வாங்கிச் செல்கின்றனர்" (மேலது.ப.53) என்று தற்கால குறவர் வாழ்வில் பன்றி இறைச்சி உணவு இடம் பெறுவதை மணி.கோ. பன்னீர் செல்வம் குறிப்பிடுகிறார்.

இதிலிருந்து சங்ககாலம் முதல் இக்காலம் வரை பன்றி இறைச்சி குறவர் உணவில் முக்கிய இடம் பெறுவதைக் காணமுடிகிறது.

**முள்ளம் பன்றி வேட்டை:**

'முளவு' என்று அழைக்கப்படும் முள்ளம்பன்றியும் இறைச்சிக்காகக் குறவர்களால் வேட்டையாடப்பட்டன. வலிமையான கைகளை உடைய கானவன் தன் கொடிய வில்லை வளைத்து ஆண் முள்ளம்பன்றியின் மார்பில் அம்பு கொடுத்துக் கொல்கிறான். இச்செய்தியை,

"வன் கைக் கான்வன் வெஞ்சிலை வணக்கி
உளமிசைத் தவிர்த்த முளவுமான்
ஏற்றையொடு" (நற். 285: 3-4)

என்ற நற்றிணைப் பாடல் வரிகள் விளக்குகின்றன.

இவ்வாறு மலைச்சாரலில் வேட்டுவன் எய்த முள்ளம் பன்றியின் கொழுவிய ஊனை கொடிச்சி சிறுகுடியினருக்குப் பகிர்ந்து கொடுக்கும் காட்சியினை,

"கானவன் எய்த முளவுமான் கொழுங்குறை
தேம் கமழ் கதுப்பின் கொடிச்சி,
கிழங்கொடு
காந்தள் அம் சிறுகுடிப் பகுக்கும்
ஓங்கு மலை நாடன்" (நற். 85: 8-11)

என்ற நற்றிணை வரிகளில் காணமுடிகிறது.

மேற்கூறிய சான்றுகளிலிருந்து கானவர் இறைச்சிக்காக முள்ளம் பன்றிகளை அம்பிட்டுக் கொன்று, தன் சுற்றத்தோடு பங்கிட்டு வாழும் கூட்டு வாழ்க்கை முறையைக் காணமுடிகிறது.

**மான் வேட்டை:**

குறவர்கள் மான் வேட்டையிலும் ஈடுபட்டனர். மான் வேட்டைக்குச் செல்லும்பொழுது கானவர் மானின் கால்தடம் பற்றி நன்கு ஆராய்ந்து, அது சென்ற பாதையைக் கணித்து அங்கு காத்திருந்து வேட்டையாடுவர். இவ்வாறு பதுங்கி இருந்து மான் வேட்டையாடுதலை,

"கல்லென் கானத்து கடமா ஆட்டி"
(குறுந். 179: 1)

என்ற குறுந்தொகை வரியிலும்

"காடு தேர்ந்து அசைஇய வயமான் வேட்டு
வயவர் மகளிர் என்றி ஆயின்
குறவர் மகளிரேம்" (நற். 276: 2-4)

என்ற நற்றிணை வரிகளிலும் காணமுடிகிறது.

கானவர் வேட்டையாடிய மான் இறைச்சி உணவுக்காகப் பயன்படுத்தப்பட்டது. வேட்டையாடிக் கொணர்ந்த மான் இறைச்சியில் மீதமானவற்றைப் பெண்கள் காய வைத்துப் பதப்படுத்தினர்.

"காண மா தொலைச்சித் தன்னையர் தந்த
நிண வாண் வல்சிப் படுபுள் ஓப்பும்"
(ஐங். 365)



Scanned with OKEN Scanner

என்ற ஐங்குறுநூற்றுப் பாடலில் தன் கணவன் கொண்டு வந்த மான் இறைச்சியைக் காய வைக்கும் குறப்பெண்கள் அதை உண்ணவரும் பறவைகளை விரட்டுவதைக் காணமுடிகிறது.

முயல் வேட்டை:

குறவர்கள் இறைச்சிக்காக வேட்டையாடும் மற்றொரு விலங்கு முயல் ஆகும். தாவர உண்ணியான முயல் வளைகளில் பதுங்கிக் காணப்படும்.

கானவர்கள் வலைவீசியும், வளைதடியைப் பயன்படுத்தயும் முயல் வேட்டை ஆடினர். இச்செய்தியை,

"எல்லு முயல் எறிந்த வேட்டுவன் சுவல" (நற். 59: 3)

என்ற நற்றிணை வரிகள் நமக்குக் காட்டுகின்றன.

பிளந்த வாயையுடைய நாய்களோடு புற்களை அசைத்து தப்பி ஓடும் முயல்களை, தப்பிச் செல்லாதபடி வலைகளை மாட்டி மறித்து வேட்டையாடும் காட்சியினை,

"பகுவாய் ஞமலியொலி பைம்புதல் எருக்கித்
தொகுவாய் வேலித் தொடர்வலை மாட்டி
முள் அரைத் தாமரைப் புல்லி இதழ் புரையும்
நேடுஞ்செவிக் குறுமுயல் போக்கு அற வளைஇ
கடுங்கண் கானவர் கடறுகூட் டுண்ணும்"
(பெரும்பாண் 112-116)

என்ற பெரும்பாணாற்றுப் படை வரிகளில் குறவர்கள் முயல்களை வலை வீசிப்பிடிப்பதைக் காணமுடிகிறது.

சங்க காலத்தில் மேற்கொள்ளப்பட்ட முயல் வேட்டை குறவரினத்திடம் தற்பொழுது அவ்வளவாக இல்லை. பிற இன மக்கள் தே... கருதி முயல் பிடிக்கக் குறவர் செல்கின்றன...

"முயல் இருக்கும் வலைகளை... கண்டறிந்து சென்று முயல் வரும் வழியில்... பாதைகளை மட்டும் அமைத்து விட்டு வலைக... சுற்றி முள் செடிகளைப் போட்டு வைத்துவிடு... மேய்ச்சலுக்கு வரும் முயல் மீது கைவிளக்... (டார்ச்) அடித்தால் அது அப்படியே பய... நின்று விடும். உடன் முயலைப் பிடித்து விடு... இரவு நேரங்களில் முயல் பிடிக்க வே... இருப்பதால் குறவர் அதிகமாக இவ்வேட்டைய... ஈடுபடுவதில்லை". (வாழும் மரபுகள், பக் - 148,15...) என்று அ. வசந்தா தற்காலத்தில் குறவர் முய... வேட்டையாடும் முறை பற்றிக் குறிப்பிடுகிறார்.

தேங்காய் எண்ணெய்யுடன் முயலி... இரத்தத்தைக் கலந்து தேய்த்தால் முடி நன்... வளரும் என்ற பரவலான நம்பிக்கை... குறவர்களிடமும் காணப்படுவதும் முய... வேட்டைக்கு ஒரு காரணமாக இன்... அமைந்துள்ளது.

உடும்பு வேட்டை :

சங்கக் குறவர் உடும்புக்கறி உண்ணும் வழக்கம் உடையவராய் இருந்தனர். உடும்பைக் கொன்று வரியுள்ள அதன் இறைச்சியைக் குறவர் தமது வீடுகளுக்கு எடுத்துச் செல்லும் காட்சியினை,

"உடும்பு கொல்இ வரிநுணல் அகழ்ந்து" (நற் 59:1)

என்ற நற்றிணை வரியில் காணமுடிகிறது.

தாம் வேட்டையாடிக் கொண்டுவந்த உடும்புக் கறியைக் கானவர் தம் முன்றிலில் வைத்துக் கூறு செய்து சமைத்து உண்பதனைப் புறநானூறு காட்டுகிறது.

தொகுப்புரை:

உணவுத்தேவைக்காக அன்றைய காலக்கட்டத்தில் முதன்மையான தொழிலாகக்



Scanned with OKEN Scanner

கருதப்பட்டு வந்த வேட்டைத்தொழில் சங்க காலக் குறிஞ்சி நிலத்தில் வேட்டைக் கருவிகளின் உதவியோடு மேம்பாடு அடைந்தது.தற்போது அரசு பல்வேறு பாதுகாப்புச் சட்டங்களை இயற்றி வேட்டைத்தொழிலைத் தடைசெய்துள்ளது. எனினும் இன்றும் பழங்குடி மக்கள் வேட்டைத்தொழிலை முதன்மையாக அன்றி துணைநிலைத் தொழிலாக மறைமுகமாக மேற்கொண்டுவருகின்றனர்.மேலும் கிராமப்புற மக்கள் தங்களது பயிர் பாதுகாப்பிற்காகவும் விலங்குகளை வேட்டையாடுகின்றனர்.

வேட்டைத் தொழிற் கூறுகளில் பெரிதாக மாற்றம் இல்லை எனினும் தொழிற் கருவிகள் மட்டும் பலவிதமான வளர்ச்சிகளைப் பெற்றுள்ளது எனலாம்.பறவை விலங்கு வேட்டைக்கென்று தொழில் நுட்பத்தைப் பிரதிபலிக்கிற வேட்டைக் கருவிகளைக் கையாளுதல், குழுவாகச் சென்று வேட்டையாடி தமக்குள் பங்கீடு செய்து கொள்வது, வேட்டையாடப்பட்ட குறிப்பிட்ட விலங்கு, பறவையின் இறைச்சியால் உண்டான மருத்துவ குணத்தை அறிந்திருத்தல் என்பன போன்ற பண்புக் கூறுகள் குறவர் இனக் குழுப்பண்பாட்டினுடைய இயற்பண்புகளாக இன்றளவும் திகழ்கின்றன எனலாம். வேட்டைத் தொழிலை இன்றுவரை கைவிட்டுவிடாமல் பேணிக் கொண்டிருப்பதன் மூலம் குறவர் சமூகம் ஓர் இனக்குழுச் சமூகமாக விளங்குகிறது. எனவே வேட்டைத் தொழில் என்பது அதன் பயன்பாட்டு அடையாளக் கூறுகளில் ஒன்றாக விளங்குவதை மேற்கூறிய சான்றுகள் வழி அறிய முடிகிறது.

**துணைநூற்பட்டியல்:**

1.இராமநாதன், ஆறு. வாழும் மரபுகள்
தன்னன்னானே பதிப்பகம்,
சென்னை.

2.சொக்கப்பா பண்டைத் தமிழர்,
நிலா நிலையம்,
சென்னை. 1956.

3.பன்னீர் செல்வம், மணி.கோ. குறவர் பழங்குடி, (இனவரைவியல் ஆய்வு)
வல்லினம் வெளியீடு,
சென்னை .2009.

சுருக்கக் குறியீட்டு விளக்கம்

| | | |
|---|---|---|
| அகத். | - | அகத்திணையியல் |
| அகம். | - | அகநானூறு |
| ஐங். | - | ஐங்குறுநூறு |
| கலி. | - | கலித்தொகை |
| கு.பா | - | குறிஞ்சிப்பாட்டு |
| குறுந். | - | குறுந்தொகை |
| திருமுருகு. | - | திருமுருகாற்றுப்படை |
| தொல். | - | தொல்காப்பியம் |
| நற். | - | நற்றிணை |
| ப. | - | பக்கம் |
| ப.ஆ | - | பதிப்பாசிரியர் |
| பக். | - | பக்கங்கள் |
| புறம். | - | புறநானூறு |
| பெரும்பாண். | - | பெரும்பாணாற்றுப்படை |
| பொருள். | - | பொருளதிகாரம் |
| மேலது. | - | மேற்குறிப்பிட்டுள்ள நூல் |

❑❑❑



Scanned with OKEN Scanner

# சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளில் சுற்றுச்சூழல் பற்றிய ஆளுமை

**D. ஜெயந்தி**

பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வாளர்
NGM கல்லூரி, பொள்ளாச்சி.

ஆய்வுச்சுருக்கம்

சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளில் சுற்றுச்சுழல் பற்றிய விழிப்புணர்வையும் நொய்யல் ஆறுமாசடைந்து வருவதையும் மணல் கொள்ளையடிக்கப்பட்டு ஆறுகள் இன்று பாலை வனமாக மாறிவருவதையும்; சாயப்பட்டறைகளின் கழிவுநீர் ஆற்றில் கலப்பதால் சுற்றுச்சுழல் மாசுபடுகின்றது. மனிதஇனம் நலமுடன் வாழ சுற்றுச்சுழல் பாதுகாப்பு மிகவும் அவசியம் என்பதை இவரது சிறுகதைகளின் ஆளுமைத்திறனாக அமைந்திருப்பதை இக்கட்டுரை ஆராய்கின்றது.

## முன்னுரை

இலக்கியம் படைப்பாளியும் ஒருசமுதாய உறுப்பினரே. எனவே அவர் வாழும் சமுதாயத்தில் தாம் காணும் தம்மைப்பாதிக்கும் நிகழ்ச்சிகளைக்கண்டு கொதிப்புற்றுத்தம் படைப்புகளில் வெளிப்படுத்துவதுடன் சமுதாயத்தில் காணப்படும் சமுதாயப் பிரச்சினைகள், சமுதாயச் சீர்கேடுகள், சமுதாய அவலங்கள், இழிநிலைகள் முதலியவற்றையும், சுற்றுச்சூழல் குறித்த விழிப்புணர்வையும் சிறுகதைகளின் வழியே செயல்படுத்த முனைந்துள்ள ஆசிரியரின் ஆளுமையைக் குறித்து ஆராய்வதுவே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## இலக்கியமும் படைப்பாளியின் ஆளுமையும்

மனித சமுதாயத்தை நன்கு அறிந்தவர்களே சிறந்த படைப்பாளிகளாக விளங்குகின்றனர் எனலாம். மக்கள் சமுதாயத்தின் பிரச்சினைகளு ஏற்பபாத்திரங்களை அமைத்து தமது கருத்தி வெளிப்படுத்தும் ஆளுமை உள்ளவர்க வெற்றி பெறுகின்றனர். இதனை மெய்ப்பிக் வகையிலே சுப்ரபாரதிமணியன் சிறுகதைகளைப் படைத்துள்ளார். படைப்பாளி பகுத்தாய்வு உள்ளம், கூர்நோக் அனுபவங்கள், அவர் வாழ்க்கையில் ஏற்ப பிறதாக்கங்கள் என்பனவும் அவர்படைப்புகளி வெளிப்படும் என்றும் படைப்பாளியா உருவாக்கப்படும் இலக்கிய அமைப்பு அவ வாழ்க்கைமுறையோடு தொடர்புடையது படைக்கப்படும் பாத்திரங்கள் அவ வாழ்க்கையில் கடந்துவந்த பாத்திரங்கள் படைப்புகளில் உணர்ச்சித் தேக்கங்களாக் காணப்படுவதை உணரலாம்.

> "படைப்பாளன்தான் சொல்லவரும் கருத்துக்களைக் கற்பவர்மனத்தில் எளிதில் பதியச் செய்யவும் விளங்கவைக்கவும் கையாளும் முறைகள் உத்தியாகும்" (செவ்வியல்,ப.71)

என்கிறார். செ.சாரதாம்பாள்

## நொய்யல் மாசுபாடு

"ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்" தமிழகத்தின் பெரும்பான்மையான நதிகளுக்கும் இன்று பொருந்தும். எல்லா ஆறுகளும் பாழ்பட்டு வருவதை தனது 'நொய்யல்'கதையில் உரக்கச் சொல்லி பதியவைத்துதன் ஆளுமையை வெளிப்படுத்துகிறார் சுப்ரபாரதிமணியன். நொய்யல்

கொங்குமண்டலத்தின் மிக முக்கியமான ஆறாகும். 175 கி.மீ.தூரம் ஓடும் நொய்யல் வெள்ளியங்கிரி மலையில் உற்பத்தியாகிறது. திருப்பூர் மாவட்டத்தைச் சுற்றிப் பலசாயப்பட்டறைகள் உள்ளன. வீட்டு நீர்க்கழிவுகளும், மின்முலாம் பூசும் தொழிற்சாலைகளின் உலோகக்கழிவுகளும் நொய்யலில் கலக்கின்றன என்பதை

‘நொய்யல்’கதையில் ‘ராமன்’

என்னும் மனசாட்சி குரலின் மூலம் ஆசிரியர் தனது கருத்தையே பதிவு செய்கிறார்.

ராமன் சிறுவயதாக இருந்தபோது இருகரையிலும் தொட்டு ஓடிய ஆறு இன்று கலையிழந்து மாசடைந்து காணப்படுகிறதை,

“நொய்யல் மாறிப்போய்விட்டது. சாயப்பட்டறைகள் ஆற்றின்கரைகளில் சுலபமாகிவிட்டது. பட்டறைகளின் கழிவுகளின் கிடங்காகிவிட்டது. ஆறு வெவ்வேறு வகையான சாயக்கலவைகள் ஒன்று சேர்ந்து கறுத்த சாக்கடை போல் எங்குமாய் வியாசித்து ஓடிக் கொண்டிருந்தது. உடம்பு முழுக்க சொறிபிடித்து அலையும் விநோதப் பிராணி போலாகிவிட்டது நொய்யல்” (ப.1102)

(சுப்பிரமணியபாரதிசிறுகதைகள்)

என்ற வரிகள் மூலம் நொய்யல் எங்ஙனம் சுற்றுச்சூழல் மாசுபாட்டின் உச்சமாகத் தன் தன்மையை இழந்துவிட்டதை அறிய முடிகின்றது.

தமிழ்நாட்டில் வாணியம்பாடி, ஆம்பூர், ராணிப்பேட்டை ஆகிய இடங்களில் உள்ளதோல் பதனிடும் தொழிற்சாலைகளில் இருந்து சுத்தகரிக்கப்படாத கழிவுகள் பாலாற்றில் கலக்குமாறு விடப்படுகின்றன. இதன் காரணமாக பல ஏக்கர் விவசாய நிலங்கள் பாழ்பட்டன. அவை விளைச்சலுக்குத் தகுதியற்றதாக மாறிவிட்டன என்று விவசாயிகள் கூறுகின்றனர். (சுற்றுச்சூழல்,-ப.45)

சாயம் கலந்த மண்ணின் தன்மை நிலத்தடிநீரையும் பாதிப்படைய செய்வதையும் மக்களின் வாழ்வாதாரமான குடிநீர் பயன்பாட்டிற்கும் கேடுவிளைவிக்கும் அவலச்சூழலை இன்று ஏற்படுத்தி வருகின்றது.

சாமியார் வேடம்

கரையில் வரும் ராமன் நொய்யல் ஆற்றினைப் பாதுகாக்கவும், சாமியார் வேடம் இட்டு ஆற்றின் பாலத்தின் அடியில் குடிசையை அமைத்து தன்னிடம் ஆசிவாங்க வருபவர்களிடம் சட்டையைப் பிடித்து ஆற்றினைப் பாழ்படுத்திவிட்டீர்களே எனக் கேள்வி கேட்க வேண்டும் என எண்ணவைப்பது சமுதாயத்தின் மேல் ஆசிரியருக்குள்ள கோபத்தினையே வெளிப்படுத்துகிறார்.

சிறுவாணி தண்ணீர் பாட்டிலில் அடைத்து விற்பது போன்று நொய்யல் ஆற்றுத் தண்ணீரைச் சாயத் தண்ணீரை விற்பனை செய்யலாம் என்று வேதனையுடன் சாமியார் பிரசிங்கித்த செய்தி உயர் அதிகாரிகளின் காதுகளுக்குச் செய்தி எட்டவே மறுநாளில் ஊடகங்களில் வெளியாகி தூய்மைப்படுத்தும் பணி துவங்கியது.

தனிமனிதனாக இருந்து சமுதாயத்தின் மேல் கொண்ட அக்கறையை வெளிப்படுத்தும் விதமாகராமன் கதாபாத்திரம் படைக்கப்பட்டு இருப்பது சுற்றுச்சூழல்மேல் ஆசிரியர் கொண்ட அக்கறையும் இக்கதை தெளிவுபடுத்துகிறது.

மணற்கொள்ளை

‘மணல்’கதையில் சாயப்பட்டறை திடக்கழிவுகளை ஆற்றின் கரையோரங்களில் கொட்டுவதால் ஏற்படும் பாதிப்புகளையும் மணல் சுரண்டுவதால் ஏற்படும் பாதிப்புகளையும், மணல் சுரண்டுவதால் ஆற்றின்வளம் பாதிப்படைவதையும் படைப்பாசிரியர் வெளிப்படுத்துகிறார்.



Scanned with OKEN Scanner

செந்தில் தொழிற்பேட்டையைக் கடந்து செல்லும்வழியில் சிறுவர்கள் சிலர் வண்டியைத் துடைப்பதற்கான பவுடர்களை விற்றுக் கொண்டு இருந்தனர். அவையெல்லாம் சாயக்கழிவுகளால் செய்யப்பட்ட ரசாயனக் கலவையென்று தெரியாமல் காசாக்கும் முயற்சியில் சிறுவர்கள் ஈடுபட்டு இருந்ததை,

"அவர்களின் கைகளில் ஒரு வகை ரசாயனம் மிளிர்ந்து கொண்டு இருந்து கைகளில் சின்னடப்பாக்கள் இருந்தன. கழிவுகளின் அடர்த்தி அவர்களின் உள்ளங்கால்களை மறைத்திருந்தது.

என்னடாபண்றீங்க"?

பவுடர்எடுக்கறம்" (ப.888) (சு.பா.சிறுகதைகள்)

ரசாயனத்தினால் ஏற்படும் அபாயங்களை நாளடைவில் அந்த வேதிப்பொருட்களின் பாதிப்பால் உடலில் புண்கள் வருவதையும் அறியாமல் இருப்பதைக் காட்டுகிறது.

பாலைவனம் ஆதல்

மணலைத் தொடர்ந்து அள்ளிக் கொண்டிருக்கையில் ஆற்றின் போக்கே மாறும் வாய்ப்பு இன்று உருவாகிவருகிறது. சுற்றுச்சூழல் கேடுகளால் ஆற்றுப்பகுதியே பாலை வனமாய்மாறி வருகிறது என்பதை,

"நொய்யல் பார்த்துக் கொண்டான்
சலசலத்து மெல்லச்
சாயக்கழிவுகளால் ஓடிக் கொண்டிருக்கிறது
இருபுறமும்
வறண்ட சாயத்துணுக்கு களாய்மணல்
நிறம் மாறி விரிந்திருந்தது" (889)

ஆறு பாலைவனமாய் மாறி வருவதையும் தொடர்ந்து மணல் எடுப்பதால் நிலத்தடிநீர்மட்டம் குறைந்து வருவதையும் இக்கதை மூலம்படம் பிடித்துக்காட்டுகிறார்.

நீங்கள்
மண்ணைவெட்டுவது
எங்கள் மழலையை
வெட்டுவதற்குச் சமம்!
அடுத்தவனுக்குப்
பள்ளம் தோண்டியே
அடையாளப்பட்டவனே..
எங்கள்
மண்ணையும் தோண்டிப்
பூமியைப் புதைத்துவிடாதே! (ப.77)

(சூழல்அறம்) சுப்ரபாரதிமணியன்

என்ற மணல் கொள்ளை பற்றிய கபிலனின் கவிதை வரிகளும் படம்பிடித்துக் காட்டுகிறது

முடிவுரை

மேற்கண்ட கருத்துக்களின் அடிப்படையில் மனிதஇனம் வாழ சுற்றுச்சூழல் காப்போம் என்ற சூளுரையைவிட செயல்பாடு அவசியம் என்பதை மனதில் கொண்டு சிறுகதையின் மூலமாக சுற்றுச்சூழல் சீர்கேடுகளைப் படம்பிடித்துக்காட்டியிருப்பது அளவிடமுடியாது. சுப்ரபாரதிமணியனின் ஆளுமையை மேலும் வலுப்படுத்துவதாக உள்ளது என்று கூறினால் அதில் சிறிதும் மிகையில்லை.

முதன்மைஆதாரங்கள்

சுப்ரபாரதிமணியன்சிறுகதைகள் - (மு.ப.2012

துணைமைஆதாரங்கள்

வேணுசீனிவாசன்
சுற்றுச்சூழல்
மாசுவிளைவுகளும்விழிப்புணர்வுகளும்
விஜயாபதிப்பகம், இ.ப. 2017

சுப்ரபாரதிமணியன்
சூழல்அறம், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ், (மு.ப. 2014

சாரதாம்பாள்.செ
செவ்வியல், ரேவதிபதிப்பகம், நத்தம், (மு.ப.1988